

# டிஜிட்டல் தொலைக்காட்சிக்கு (DTV) மாறுவதற்கான நேரம் வந்துகொண்டிருக்கிறது.

**வியக்கத்தகும் வகையிலான சிறந்த தொலைக்காட்சிக்காக தயாராகுங்கள்.**

**சட்டப்படி, நாடு முழுவதும் உள்ள தொலைக்காட்சி நிலையங்கள் அனைத்தும்** தங்களுடைய ஒளிபரப்பை ஆனலாகிலிருந்து டிஜிட்டலுக்கு பிப்ரவரி 17, 2009* க்குள் கண்டிப்பாக **மாற்றிக்கொள்ள** வேண்டும். கேபிள், சாட்டிலைட் அல்லது தொலைபேசி நிறுவன தொலைக்காட்சி ஒளிபரப்பு சேவை இணைப்பு பெற்ற தொலைக்காட்சி பெட்டிகள் இதன்மூலம் பாதிக்கப்படாது மற்றும் இந்த தேதிக்கு பிறகும் நிகழ்சிகளை தொடர்ந்து கண்டுகளிக்க முடியும். கட்டணத் தொலைக்காட்சி சேவையில் இணைக்கப்படாத ஆனால் ஆண்டனாவிலிருந்து சிக்னலைப் பெறுகின்ற ஆனலாக் தொலைக்காட்சிப் பெட்டிகள் மாற்றலுக்கான தேதிக்கு பிறகும் தொடர்ந்து தொலைக்காட்சி சிக்னல்களை பெறுவதற்கு DTV கன்வர்ட்டர் பெட்டிகள் தேவைப்படும்.

*குறைந்த-சக்தி மற்றும் A வகுப்பு TV நிலையங்கள் விலக்களிக்கப்பட்டுள்ளன.

### டிஜிட்டல் தொலைக்காட்சி (DTV) என்றால் என்ன?

டிஜிட்டல் தொலைக்காட்சி என்பது கணினியைப் போன்று, காட்சிகளை தரவுக் கூறுகளாக காற்றலைகள் மூலம் அனுப்பப்படும் ஒரு புரட்சிகரமான புதிய வகை காற்றுவழி ஒளிபரப்பு தொழில்நுட்பமாகும். வியக்க வைக்கும் வகையில் மிகத் துல்லியமான காட்சிகள், சிறந்த ஒலித் திறம் மற்றும் அதிக நிகழ்ச்சித் தேர்வுகளை TV நிலையங்கள் வழங்குவதற்கு DTV வழிவகை செய்கிறது.

பார்வையாளர்களுக்கு ஹை-டெ∴பனிஷன் (HDTV) ஒளிபரப்பு சாத்தியத்தை HD பெட்டிகளுடன் DTV அளித்தும் குறிப்பிடத்தக்க வகையில் மேம்படுத்தப்பட்ட அருகாமையில் படம் பிடிக்கப்பட்டதைப் போன்று ஒன்றோடொன்றான தொடர்பு திறன்களையும் தரவு சேவைகளையும் வழங்குகிறது.

## இந்த மாற்றம் எதற்கு?

**காங்கிரஸினால் ஒப்புதல் அளிக்கப்பட்ட சட்டத்தின்படி** - பற்றாக்குறை குறைத்தல் சட்டம் 2005 - முழு-திறன் கொண்ட உள்ளூர் தொலைக்காட்சி நிலையங்கள் தங்களுடைய ஆனலாக் சானல்களை பிப்ரவரி 17, 2009 அன்று நிறுத்திக்கொண்டு பிரத்தியேக **டிஜிட்டல் வடிவில்** ஒளிபரப்பை தொடரவேண்டும்.

## DTV-யின் பயன்கள் என்ன?

**DTV என்பது அதிக திறனுள்ள வழியில் ஒளிபரப்பு செய்வதற்கு உதவுகிறது** மற்றும் பல்வேறு வகையான புதிய சேவைகளுக்காக காற்றலைகளை வெற்றிடமாக்குகிறது. வாடிக்கையாளர்களுக்கு HD தொலைக்காட்சி பெட்டிகளுடன் துல்லியமான படக்காட்சிகள் மற்றும் ஒலி, அதிக சானல்கள் மற்றும் காற்றின் வழியே இலவசமான ஹை டெ∴பனிஷன் தொலைக்காட்சியை DTV வழங்குகிறது. முன்னேப்போதும் இல்லாத வகையில் DTV அதிக சேவைகளை இலவசமாக தொலைக்காட்சி ஒளிபரப்பை அனுமதிக்கிறது.

### யாரெல்லாம் பாதிக்கப்படுவார்கள்?

ஆனலாக் ட்யூனர் பொருத்தப்பட்ட தொலைக்காட்சி பெட்டிகளில் உள்ள ஆன்ட்டெனா வழியாக **தொலைக்காட்சி ஒளிபரப்பு சிக்னல்களை இலவசமாக பெறுகின்ற வாடிக்கையாளர்கள்** - மற்றும் கேபிள், சாட்டிலைட் அல்லது தொலைபேசி நிறுவன தொலைக்காட்சி சேவை வழங்குபவர்களிடம் இணைப்பு பெறாதவர்கள் - ஆகியோர் இந்த மாற்றத்தினால் பாதிக்கப்படுவார்கள்.

பிப்ரவரி 17, 2009க்கு பிறகு குறைந்தபட்சம் 19.6 **மில்லியன் குடும்பங்கள்** இந்த இலவச தொலைக்காட்சி ஒளிபரப்பு சிக்னல்களை தங்களுடைய இல்லங்களில் பிரத்தியேகமாக பெறுகிறார்கள், மற்றும் உரிமையாளர்கள் தங்களுடைய தொலைக்காட்சி பெட்டிகளை மேம்படுத்துவதற்கான நடவடிக்கையை எடுக்கத் தவறும்பட்சத்தில், ஏறக்குறைய 70 மில்லியன் தொலைக்காட்சி பெட்டிகள் முழு-திறன் கொண்ட தொலைக்காட்சி நிலையங்களில் இருந்து தங்களுடைய சிக்னல்களை இழக்கும் அபாயத்தில் உள்ளன.

### DTV-க்கு நான் எவ்வாறு திறன் உயர்த்திக்கொள்வது?

**பிப்ரவரி 17, 2009-க்குள் பின்வரும் மூன்று வழிகளில் ஒன்றில் உங்களால் DTV-க்கு மேம்படுத்திக்கொள்ள முடியும்:**

1. DTV கன்வர்ட்டர் பாக்ஸ்: DTV கன்வர்ட்டர் பாக்ஸை வாங்கி அதை உங்களுடைய பழைய ஆனலாக் TV செட்டினுள் சொருகுங்கள். $40 முதல் $70 வரையிலான விலையில் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படும் கன்வர்ட்டர் பாக்சுகள் 2008 இன் தொடக்கத்தில் இருந்து கிடைக்கப்பெற்று தடையின்றி இலவச தொலைக்காட்சி ஒளிபரப்பை நீங்கள் பெறுவதற்கு வழிவகை செய்யும்.

**(பின்புறம் தொடர்கிறது)**

DTVAnswers.com

இந்த பெட்டிகளை நீங்கள் வாங்குவதற்காக ஃபெடெரல் அரசாங்கம் $40 கூப்பன்களை வழங்குகிறது. (விவரங்களுக்கு கீழே காணவும்).

2. டிஜிட்டல் TV பெட்டி: $100-க்கும் குறைவாக துவங்கும் விலையில் உள்ள டிஜிட்டல் அல்லது முன்னேறிய தொலைக்காட்சி அமைப்புகள் குழு (அட்வான்ஸ்டு டெலிவிஷன் சிஸ்டம்ஸ் கமிட்டி (ATSC)) ட்யூனர் உடன் அமையப்பெற்ற புதிய தொலைக்காட்சி பெட்டி ஒன்றினை வாங்கிடுங்கள். தொலைக்காட்சி நிலையத்தாரால் ஒளிபரப்பப்படும் டிஜிட்டல் சிக்னல்களை பெறுவதற்கு டிஜிட்டல் டியூனர் உள்ள அனைத்து TV பெட்டிகளாலும் முடியும், ஆகையால் எந்த ஒரு மாதாந்திர கட்டணங்களும் செலுத்தாமல் தொடர்ந்து உங்களுடைய இலவச நிகழ்ச்சிகளை உங்களால் பார்க்க முடியும்..

3. கட்டண சேவை: அனைத்து உள்ளூர் ஒளிபரப்பு நிலையங்களும் இந்த சேவையை வழங்க முன்வந்தால், கேபிள், சாட்டிலைட் அல்லது தொலைபேசி நிறுவன சேவை வழங்குபவர்களிடம் சந்தா செலுத்தி உங்களுடைய ஆனலாக் TV பெட்டியை தொடர்ந்து பயன்படுத்துங்கள்.

## DTV கன்வர்ட்டர் பெட்டி என்பது என்ன?

**ஒரு மின்னணு உபகரணமான DTV கன்வர்ட்டர் பெட்டி,** உங்களுடைய ஆனலாக் தொலைக்காட்சிப் பெட்டி மற்றும் ஆன்ட்டெனாவில் இணைக்கப்பட்டு டிஜிட்டல் தொலைக்காட்சி சிக்னலை ஆனலாக் ஆக மாற்றி உங்களுடைய ஆனலாக் TV-யில் காணுமாறு செய்கிறது. கன்வர்ட்டர் பெட்டிகள் $40 முதல் $70 வரையிலான விலையில் இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## DTV கன்வர்ட்டர் பெட்டிக்கான கூப்பனை நான் எவ்வாறு பெறுவது?

டிஜிட்டலுக்கு மேம்படுத்திக்கொள்வதற்கான செலவுகளை சமாளிப்பதற்கு **ஃபெடரல் அரசாங்கம்** DTV கன்வர்ட்டர் பெட்டிகளை வாங்கிக்கொள்வதற்காக கூப்பன்களை வழங்குகிறது. 90 நாட்களுக்குள் மாற்றுவதற்கு செல்லுபடியாகும் $40 மதிப்பிலான இரண்டு கூப்பன்கள் வரை குடும்பத்தினர் விண்ணப்பிக்க முடியும். மேலும் அதிக விவரங்களுக்கு அல்லது கூப்பனை பெறுவதற்கான வேண்டுகோளுக்கு அழையுங்கள் 1 (888) DTV-2009 அல்லது 1 (877) 530-2634 (TTY), பார்வையிடுங்கள் www.DTV2009.gov அல்லது கூப்பன் விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய முகவரி PO Box 2000, போர்ட்லேண்டு, OR 97208.

## என்னுடைய ஆனலாக் TV பெட்டியை நான் வைத்துக்கொள்ள முடியுமா?

**முடியும். புதிய டிஜிட்டல் தொலைக்காட்சி பெட்டியை வாங்குவது** DTV-க்கு மாறுவதற்கான ஒரே வழி அல்ல. உங்களுடைய ஆனலாக் பெட்டியை தொடர்ந்து பயன்படுத்த நீங்கள் விரும்பினால், பின்வரும் விருப்பத் தேர்வுகளில் ஒன்றை டிஜிட்டல் தொலைக்காட்சிக்கு மாறுவதற்காக நீங்கள் நிச்சயமாக தேர்ந்தெடுக்க வேண்டும்.:

1. ஆனலாக் தொலைக்காட்சி பெட்டிகளுக்காக புதிய டிஜிட்டல் சிக்னலை அனலாம் வடிவத்திற்கு மாற்றும் DTV கன்வர்ட்டர் பெட்டியை வாங்க வேண்டும்.

2. புதிய டிஜிட்டல் சிக்னலை பெறுவதற்கு கேபிள், சாட்டிலைட் அல்லது தொலைபேசி நிறுவன சேவை வழங்குபவர்களிடம் இணைப்பை பெறுவதற்காக சந்தா செலுத்த வேண்டும்.

## நான் வைத்திருக்கும் தொலைக்காட்சிப் பெட்டி டிஜிட்டலா அல்லது அனலாகா என்பதை நான் எவ்வாறு அறிவது?

**உங்களுடைய தொலைக்காட்சிப் பெட்டி காற்றுவழி டிஜிட்டல் ஒளிபரப்பு சிக்னல்களை பெறுகின்றனவா என்பதை கண்டறிய,** உங்களுடைய உரிமையாளர் கையேட்டை படித்துப் பாருங்கள் அல்லது அட்வான்ஸ்டு டெலிவிஷன் சிஸ்டம்ஸ் கமிட்டி (ATSC) டியூனர் தன்னகத்தே கொண்டிருப்பதற்கான குறியீடு தொலைக்காட்சிப் பெட்டியின் மீது உள்ளதா என்பதை கவனியுங்கள். தயாரிப்பாளருடைய வலைதளத்திற்கு சென்று தயாரிப்பு மாடல் எண்ணை பயன்படுத்தி உங்களால் தொலைக்காட்சிப் பெட்டியின் திறன்களை சோதிக்கவும் முடியும்.

## HDTVயும் DTVயும் ஒன்றா?

இல்லை. DTV என்பது டிஜிட்டல் தொலைக்காட்சி. HDTV என்பது ஹை டெஃபனிஷன் தொலைக்காட்சி. HDTV என்பது DTVயின் அதிகபட்ச தர வடிவம், ஆனால் இது பல்வேறு வடிவங்களில் ஒன்று மட்டுமே. ஹை டெஃபனிஷன் தொலைக்காட்சி பெட்டிகளை வைத்திருக்கும் வாடிக்கையாளர்களால் ஹை டெஃபனிஷன் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை இலவசமாக ஆன்ட்டெனாவை பயன்படுத்தி பார்க்க முடியும்.

## DTV ஒளிபரப்பை பெறுவதற்கு பிரத்தியேக ஆன்ட்டெனா ஏதேனும் அவசியமா?

**சிறந்த உள்ளரங்கு அல்லது வெளியரங்கு ஆன்ட்டெனா** உங்களுடைய DTV காட்சிகளை மேலும் தெளிவாக அதிகரிக்கச் செய்யும். பொதுவாக, DTV அவ்வாறு செயல்படுவதற்கு தற்போது உங்களுடைய இல்லத்தில் உள்ள ஆனலாக் TV சிக்னல்களின் மூலம் சிறந்த தரமான காட்சிகளை தருவதைப் போன்ற அதே வகையான ஆன்ட்டெனா இதற்கும் தேவைப்படும்

உங்களுக்கான இலவச, உள்நாட்டில் ஒளிபரப்பாகும் TV சானல்களை பெறுவதற்கான வெளியரங்கு ஆன்ட்டெனாவை தேர்ந்தெடுப்பதற்கு உதவி தேவையெனில், www.antennaweb.org என்ற வலைதளத்தை பாருங்கள்.

---




இது, 8,300 க்கும் மேற்பட்ட இலவச உள்ளூர் ரேடியோ மற்றும் தொலைக்காட்சி நிலையங்கள் மற்றும் நாடு முழுவதிலும் ப்ராட்கேஸ்ட் நெட்வர்க்குகள் கொண்ட நேஷனல் அசோஷியேஷன் ஆஃப் ப்ராட்கேஸ்டர்ஸின் ஒரு முயற்சியாகும்.

DTVAnswers.com